94

பதிவு எண் — M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

முல்லைக்கொடி

தமிழ்க் கிழமை வெளியீடு :- இது, சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—ரு. குருகுலம், மாம்பாக்கம் ; விக்ருதி, மாசி ; 9—3—51. தளிர்—உக

"குணநலம் சான்றோர் நலனே ; பிறநலம்
எந்நலத் துள்ளதூஉ மன்று"

"கடனென்ப நல்லவை யெல்லாம் ; கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு."

வாழ்வியல் இயக்கம்

(குருகுலச் செய்கைகள்)

நாற்றிசை யிலும்பல் வேற்றுமை கொண்டு
நலமிழந் துயிர்க்கும் நானில மக்கள்
எத்திறத் தவரும் முக்கா லத்தும்
ஏற்றிப் போற்றிட வேற்றுமைக் குட்படா(து)
ஆழ்ந்துசெல் வாழ்வியல் சூழ்வுகள் அனைத்தின்
அடிப்படை உண்மைகள் யாவையுந் தொகுத்துத்
தெள்ளிய குறட்பாக் களினால் வள்ளுவர்
செய்தருள் திருக்குறட் பொதுமறைக்(கு) அம்ம,
மதுராந் தகத்து மாம்பாக் கத்தின்
வடதிருச் சிற்றம் பலப்பெரு வெளியில்
இரண்டா யிரமாண் டானபின் திரண்டே
எழுதருங் காட்சி விளக்கமாய்ச் செழுமுங்
குருகுல மதனின் பெருநலங் கேண்மின்!
ஒளிவளர் பள்ளி, உணவகம், முல்லைக்
கொடியிதழ், படிப்பகம், மிடியறு தொழிலகம்,
குலவுகல் லூரி, கலையரங்(கு), அச்சகம்
முதலிய உறுப்புகள் பலவுடைக் கடலாய்,
கொள்கையும் செயலும் ஒன்றுங் கோட்டின்,
நிலவுமெய் யன்பர் குலவுநற் சூழலாய்,
நாட்டுப் புறத்தின் நலங்கிளர் சேவை,
'ஒன்றே குல'மெனும் ஒருமைத் தொண்டு,
அரசியல் தெளிவு, அருங்கலை யுணர்வு,
பொருள்செயல் வகை,நல் லுணவுப் பெருக்கம்,
குடிசைத் தொழிலே, இயற்கை மருத்துவம்,
மன்பதைப் பணியே, சிற்றுயிர்ப் பணியே,
சான்றாண் மைத்திற மாகிய மேன்மைப்
பன்னிரு வகையின் பணித்திற முகிலாய்,
நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
உடையராய்ச் சிற்றூர் ஒதுக்கினிற் கிடக்கும்
ஒடுக்கப் பட்ட உரிமையில் மக்களின்
உயர்வை யுன்னி உருமு முழக்கமாய்,
நெறிகள் பலவிற் செறிதரு மக்கள்
எல்லாம் ஒருகுலம் வல்லான் ஒருவனே
என்னும் பெருநெறி துலக்கும் மின்னலாய்,
எல்லையில் கட்சிப் பிணக்குறுகட் கொல்லையில்
இடந்தந் தழியும் மக்களை இனவழி
மொழி,கலை, தொழில்,அருள், பணிஎனும் ஐவகை
மொய்ம்பினிற் சிறந்து செம்மைநல் வாழ்வில்
நிலைபெற வைக்கும் பொலந்தலைப் பெயலாய்,
எளிமையின் படிவம் இன்சொற் செல்வம்
புலமையின் திலகம் பொறுமையின் மலையெனப்
போதரும் எந்தம் பொற்புடை ஆசான்
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோன்
அருள்நெறி படருந் தெருள்நிறை அந்தணன்
இளவழ கப்பேர் வளாருட் குருவின்
இனியநல் வாழ்க்கைப் பிழிவின் பொழிவாய்த்,
திருவருள் ஆற்றலால் உருவளர் மக்களின்
இழுமெனும் உணர்வினை விழுமிய தாக்கி
வளஞ்செழும் வாழ்வு வாழ்ந்திடச் செய்யும்
வாழ்வியல் இயக்கமாய், வளர்வது மன்னோ!

—ஆடலரசு.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 4. தனித் தாள்—அணா 1

- சிந்திய எண்ணங்கள் -

இலக்கிய மாதர்

—சி. து. க.

பண்டைக்காலத்தில் மாதர் தாம் சமைத்த அடிசில் இனிதா யுள்ளது என்று கணவன் உண்பதனுல் பெரு மகிழ்ச்சி அடைந்தார்கள்.

"முளிதயிர் பிசைந்த காந்தண்
மெல்விரல்
கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்
தான்துழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவ னுண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்
றொண்ணுதல் முகனே."
—(குறுந்தொகை)

என்னும் அமிழ்தச் செழும்பாடலில் வரும் குறிப்பினைக் கொண்டு அக்கால மாதர் இயல்பினை ஒருவாறு உணரலாம்.

சிலப்பதிகாரத்தில் ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. மதுரைப் புறஞ்சேரியில் மாதரி என்னும் இடைக்குல முதுமகள் வீட்டில் கோவலனும் கண்ணகியும் தங்கியிருந்தார்கள். இடைக்குல மடந்தையர் உதவிய பொருள்களைக் கொண்டு, கண்ணகி, தானே அடிசில் அமைத்தனள். தன் மெல்லிய விரல்கள் சிவப்பெய்த அரிவாள் மணையில் அடிசிலுக்கான காய்களை அரிந்து திருத்தினள். வரகு வைக்கோலை எரித்து அடிசிலாக்கும் நேரத்தில், புகையினுல் திருமுகம் வெயர்த்தது; செங்கண் சேந்தன. தன் கை வல்ல அளவினுல் தன் காதலனுக்கு அடிசிலாக்கி 'அடிகேள், அமுதமுண்க!' என்று அழைத்தனள். கோவலன், தன் காதலி சமைத்த அடிசிலை இனிதென உண்ணத் தொடங்கினுன். கண்ணகியின் உள்ளம் பெருமகிழ்ச்சி அடைந்தது. அதனை அடுத்துத் துயரமும் தோன்றிற்று. ஏன்? கணவனுடைய மாறிய ஒழுக்கத்தினுல் இத்தகைய மகிழ்ச்சி இத்துணை நாட்களும் எய்தாது ஒழிந்ததே என்றுதான். சிறந்த இல்லறப் பணியில் அடையும் மகிழ்ச்சியை இழந்த நிலைமையை எண்ணி வருந்தினள். அறவோர்க்கு அளித்தல் முதலான செயல்களைக் கணவனுடன் இருந்து செய்யாமல் நாட்கள் வறிதாய்க் கழிந்தனவே என்று எண்ணிக் கவலையடைந்தனள். இக் கருத்துப் பின்னர் தன் கணவனேடு உரையாடும்போது வெளியாகின்றது.

"அறவோர்க் களித்தலும் அந்தண
ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலும்
தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும்
இழந்த என்னை"
—சிலப். மதுரைக்.

என்று அவள் கூறும் கூற்றுக்கள் இதனைத் தெரிவிக்கின்றன.

அசோக வனத்தில் அரக்கர் வேந்தனுல் சிறையிடப்பட்ட மிதிலைத் திருமகள், சிந்தனை வெள்ளத்தில் மூழ்கியிருந்தபோது, மற்றெல்லா நிலைமைகளைக் காட்டினும், தான் கணவனுடன் இருந்து இல்லறப் பண்பில் திகழும் நிலைமை தவிர்ந்ததையே பெரிதாக நினைந்து ஏங்குகின்ருள். புல்லிய 'அடகு' உணவாக இருப்பினும் தன் கையாற் சமைத்துக் காதலனுக்கு இட்டு, அவன் மகிழ்ச்சியில் தானும் பங்குகொள்ள முடியாமற் போனதை எண்ணி நைகிருள். இலைக்குடிலை நாடிவரும் விருந்தினர்களைத் தன்னேடு தன் மனைவியும் இருந்து எதிர்கொண்டழைத்தற் கில்லையே என்று தன் கணவன் உள்ளம் என்ன பாடுபடுமோ என்று எண்ணி வாடுகின்ருள். இந்நிலைமையை,

"அருந்து மெல்லட காரிட
வருந்துமென றழுங்கும்,
விருந்து கண்டபோ தென்னுறு
மோவென விம்மும்,
மருந்து முண்டுகொல் யான்கொண்ட
நோய்க்கென்று மயங்கும்,
இருந்த மாநிலம் செல்லரித்
திடவுமாண் டெழாதாள்."
—கம்ப: சுந்தர, காட்சி, கரு.

கணவன் வாழ்வுக்குத் துணையாக நின்று இல்லறச் செவ்வியில் ஈடுபடுவதனுல், பிற துறைகளில் ஈடுபட்டு அடையும் நலன்களைக்காட்டிலும் எத்துணையோ மடங்கு நலன்களைத் தமக்கும் நாட்டுக்குமாகத் தேடிக்கொள்ள மாதர்களால் முடியும். மனைவி எத்துணையோ வகைகளில் கணவன் வாழ்வில் உறு துணையாகிருள். அவன் இன்புறத் தானும் இன்புற்றும், துன்புறும் காலத்தில் தான் அவன் உள்ளம் எழுச்சி கொள்ளவும் வீறு கொண்டு எழவும் தக்க நன்மொழி புகன்றும் அவனுக்கு உசாத் துணையாக இருக்க முடியும்.

நஞ்சன்கூடு பல்பொடி
பாக்டெரியாரின்

யுனைடெட் கன்ஸர்ன்,
54, டந்தர் தெரு, :: சென்னை. 1

பெரிய புராணம்

ஒரு நேரம், உபமன்னிய முனிவர் அவ்வாறு இருந்தபோது, தொலைவில் ஓர் ஒளி தெரிந்தது; வரவர ஆயிரம் ஞாயிறுகளின் பேரொளி போல மிகுந்து தோன்றிற்று. சூழ இருந்த மாதவரெல்லாம் அது கண்டு வியந்து, 'யாது இது' என்று அறிய விரும்பினர்.

முனிவர் இறைவன் திருவடி உன்கி அதன் மெய்ம்மை தெளிந்து, தென்னாட்டில் திருத்தொண்டத் தொகை அருளிச்செய்தலாகிய செயற்கருஞ் செயலைச் செய்து புகழ்பெற்ற நாவலர்கோன், ஆண்டவன் திருவருளால் திருக்கயிலை அணைகின்றார் என்று சொல்லி, கைகள் கூப்பித் தொழுது உடம்பு புளகாங்கிதங் கொள்ள எதிர்கொண்டு சென்றார்.

உடனிருந்த மாதவர், 'ஆண்டவன் திருவடியையன்றி வேறு வணங்கியறியாத தேவரீர் இங்ஙனம் ஓர் அடியாரை எதிர்கொண்டு தொழுதல் கூடுமோ' என ஐயுற்று நிற்க, 'ஆண்டவனைத் தம் உள்ளத்தில் தழுவியவர் அவர்; ஆதலால் அவர் நம்மால் வணங்கப் பெறும் அருட் சிறப்புடையவர்' என்று நம்பியாரூரர் மேன்மையைக் காரணத்துடன் எடுத்துக் காட்டினார்.

அங்ஙனமானால், 'பிறவியை வென்ற பேரொளியாயாகிய அப் பெருமானுடைய தவச் செயல்களைத் தெளிவாகக் கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புகின்றோம்; அருள் செய்ய வேண்டும்' என்று அந்தணர் விரும்புதலும், முனிவர் வன்றொண்டர் செய்கைகளை உள்ளவாறு சொல்லுகின்றார்.

'நறுமண மாலையும் அள்ளூந் திருநீறும் எடுத்துவந்து இறைவனுக்குத் திருக்கயிலையிற் சேவை செய்யும் 'ஆலால சுந்தரன்' என்பவர், ஒருநாள், மாலைக்கு மலர் எடுக்கப் பூங்கா சென்றார். அப்போது, இறைவிக்குத் தொண்டுசெய்யும் 'அநிந்திதை' 'கமலினி' என்னும் மங்கையர் இருவர் இறைவன் திருவருளே என்னும்படி பூங்காவுக்கு வந்து இறைவியின கூந்தற்கு மலர் எடுத்துக்கொண் டிருந்தனர். தவத் தென்னாடு மேன்மேலும் விளக்கம் பெறும் பொருட்டு, எதிர்காலத்தில் தீதிலாத் திருத்தொண்டத் தொகை செய்ய இருக்கும் 'ஆலால சுந்தரர்' அம் மாதர்மேல் மனம் போக்கினர்.

மலர் கொண்டு திரும்பியபின், சுந்தரர் நிலை தெரிந்து இறைவன் 'நீ மாதர்மேல் மனம் வைத்தனை; காதற் சிறப்பு மிக்க தென் தேயத்திற் பிறந்து அம் மெல்லியலாருடன் இன்பம் நுகர்க' என்று ஆணை தந்தார். கேட்ட சுந்தரர் நெஞ்சங் கலங்கி, 'ஐயனே, தேவரீரைப் பிரியுஞ் சிறுமையேன் ஆயினேன்; மையலால் அடியேன் நிலை மயங்குங்கால் அருள் கூர்ந்து தடுத்து ஆட்கொள்ள வேண்டும்' என்று கைகூப்பித் தொழுது வேண்டிக்கொண்டார். அருள் வடிவினனான இறைவனும் அதற்கு இசைந்தார்.

நங்கைமாருடன், ஆலால சுந்தரர் பின்பு தென்திசையில் தோன்றி வாழ்க்கை மேவினர்.

இங்ஙனம் உபமன்னிய முனிவர், நம்பியாரூரர் செயல்களை விளக்குதலும், உடனிருந்த அந்தணர், 'தென்திசைமட்டும் ஏனைத் திசைகளைவிட மேம்பட்டது எப்படி' என்று தொடர்ந்து கேட்டனர்.

“புலிக்கால் முனிவர் தவமியற்றியதும், யாவரும பெரும் பற்றாய்ப் பற்றுதற்குரியதென்னும் பெருமையால் 'பெரும்பற்றப் புலியூர்' என்னும் பெயர் வாய்ந்ததும், 'யோகிக'ளாகிய ஒருமையாளர்க்கு அவர் மேம்பாட்டுக்குரிய ஞானத் திருப்பதியாய்ச் சிறப்பதும், உமையம்மை காண அத்தன் திருநடம் புரிவதமாகிய 'திருச்சிற்றம்பலம்' என்னுந் திருப்பதியை வேறு எந்தத் திசை பெற்றிருக்கின்றது?

மண் நீர் தீ காற்று வான் என்னும் ஐம் பெரும் பொருள்களின் உள் மலர் என்னும்படி திகழும் வேதமூலமாகிய ஓங்காரம், உலக மென்னும் மங்கையின் இதயம்போல் திகழ்கின்ற திருவாரூர் என்னுந் தென்திசைத் திருப்பதியிலேதான் வெளிப்படுகின்றது.

உலகம் ஈன்ற அன்னையாகிய உமையம்மை, தனித் தவத்தால் கம்பையாற்றில் வழிபட்டுத் தம்பிரானைப் பெற்ற திருக்காஞ்சித் திருப்பதியையும் தென்திசை உடையது.

மேலும், நமக்கெல்லாம் திருவாயிற் காவல் தலைவராகிய நந்தி பெருமான் தவம் செய்து அருள்பெற்ற பெருமை வாய்ந்ததும், சடையிற் கங்கையும் கையிற் கனலும் மலர்கின்ற இறைவன் இங்குபோல் வீற்றிருப்பதமான திருவையாறும் திகழப் பெறுவது தென் திசை!

தேசமெல்லாவற்றிற்குந் தேசுதருந் தென்திசையில் திருத்தோணிபுரமும், வழிபாட்டுக்குப் பொருந்தும் வேறு திருப்பதிகளும் பல உள்ளன.

இக் காரணங்களால் தென் திசைக்குப் பிற திசைகள் இணையாக மாட்டா” என்று முனிவர் விடை கூறினர்.

உயர்ந்த --
வைரங்கள்
சவரன் போன் நகைகள்
அசல் வெள்ளி
சாமான்கள்
உத்தரவாதமுள்ளவை
S. சாமிநாத அய்யர் & சன்ஸ்
111, நேதாஜி போஸ் ரோடு,
சென்னை 1.
வெள்ளி விக்கிரகங்களும் கிடைக்கும்
— GUARANTEED —
JEWELLERY HOUSE

"எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே."
—புறநானூறு.

கிளை	விகிருதி, மாசி	தளிர்
3	9-3-51 வெள்ளி	21

- ஒன்றுபட்டால் -

ஒரு நாட்டுக்குத் தேவையான எல்லாப் பொருள்களும் அந் நாட்டிலேயே கிடைக்கமாட்டா. ஆகவே, தன்னிடம் இல்லாத பொருள்களைக், கிடைக்கும் நாடுகளிலிருந்து அது பெற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

இப்படி உலகிலுள்ள எல்லா நாடுகளும் ஒன்றுக்கொன்று உதவி புரிந்துகொள்வது நல்லது. எந்த நாடும் பிற நாட்டோடு கருத்து வேறுபாடு காரணமாகவோ, அல்லது வேறு காரணமாகவோ பிணக்குற்று அதனால் பொருள்களுக்கு இழப்புண்டாக்கிக் கொள்ளுதல் நல்லதாகாது. இவ் வுண்மையை உலகம் அறிந்திருந்தும், செயலில் அது முழு வெற்றி பெற்றதாகத் தெரிய வில்லை.

ஆனால், அண்மையில், இந்தியாவும் பாகியத்தானும் செய்து கொண்ட வாணிப ஒப்பந்தத்தால் இவ் விரு நாடுகளும் மேற்கண்ட உண்மையில் ஈடுபட்டுச் செயலில் இறங்க முன்வந்திருக்கின்றமை புலனாகின்றது.

உணவுப் பொருள் மிகுதியாகக் கையிருப்பில் உள்ள பாகியத்தான் நாடு அருகில் இருக்கையில், அதனிடம் உள்ள கையிருப்பை வாங்கி நம் பற்றுக்குறையை நிரப்ப முடியாதிருந்தது. நம் பற்றுக்குறை முழுவதையும் நிரப்பப் போதுமானதாயில்லா விட்டாலும், கிடைத்த வரையில் கூடப் பயன்பெற முடியாதிருந்தது.

அப்படியே பருத்தியும் சணலும் கையிருப்புள்ள நாடு பாகியத்தான்; இருந்தும், அதை வாங்கி நம் தேவைக்குப் பயன்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.

ஆதலால், தொலைவான நாடுகளிலிருந்து உணவுப் பொருள்களும், பருத்தியும் பெருஞ் செலவு செய்து வாங்கவேண்டிய நிலை இருந்தது.

இதுபோல, இந் நாட்டிலுள்ள நிலக்கரி, 'சிமெண்ட்டு', துணி முதலிய பொருள்களை வாங்கிக் கொள்ள முடியாமல் பாகிபத்தான் மிகத் தொலைவான நாடுகளிலிருந்து மிகுதியாகச் செலவு செய்து அவற்றை வாங்கிக் கொள்ளவேண்டி யிருந்தது.

எப்படியோ இரு நாடுகளுக்கும் ஓர் ஒப்பந்தம் அண்மையில் ஏற்பட்டது வரவேற்கத் தகுந்ததாகும்.

இனி அந் நாட்டிலிருந்து ஓரளவு அரிசியும் கோதுமையும் இந்தியாவுக்குக் கிடைக்கும். வரும் கோடைக்கு இது தக்க உதவியாயிருக்கும். போதிய பருத்தியும் சணலும் கிடைக்காமல் ஆலைகளுக்கு ஏற்பட்ட இன்னலும் இனி நீங்கும்.

இதுபோல அந் நாட்டுக்கு வேண்டிய நிலக்கரி, துணி, சிமெண்ட் முதலிய பொருள்கள் இங்கிருந்து கிடைக்கும்.

இவ் வொப்பந்தம் ஒரு கால அளவுக்குத்தான் என்றாலும், இனியும், இவ்வாறு உதவிக் கொள்ளும் மனப்பான்மையை வளர்த்துவர முயல்வதே நலம்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"

—"முத்து"

குருகுலத்தில்

'டெப்டி தாசில்தார்'
K. பெரியநாயகம் M. A. அவர்கள்

பொன்னுரை

நேற்று ஒரு நண்பர் என்னிடம் வந்து தாங்கள் முதியோர் கல்வித் திட்டத்தைப் பரப்ப அதிக முயற்சி மேற்கொள்ளத் தேவையில்லை என்று ஒரு புதிர் போட்டார். எனக்கு வியப்பாகி விட்டது. காரணம் கேட்டேன்.

'கட்டாயக் கல்வி' நாட்டில் அமுலுக்கு வந்துவிட்டது. 1951 முதல் 1956க்குள் இப்போதுள்ள சிறுவர் எல்லோரும் படித்துவிடுவர். 25 ஆண்டுகள் கழித்துப் பார்த்தால் முதியோர் கல்வித் திட்டத்துக்கே இடமில்லாதபடி எல்லாரும் கல்வி அறிவுள்ளவர்களாகிவிடுவார்கள் என்று கூறினார். அது, அவ்வளவு எளிதாக முடியக்கூடிய செயலா!

நூற்றைம்பது ஆண்டுகளாக முயன்றும் 100க்குப் பத்து என்னும் அளவுக்குப் படித்தவர் என்று சொல்லக்கூடியவர் இருக்கும்போது, இதிலும் அதிகம் படித்தவர் 'நூற்றுக்கு' நான்கு மூன்றாக இருக்கும்போது, இருபத்தைந்து ஆண்டுகளில் எல்லாரும் கல்வியிற் சிறந்தோராவது எங்ஙனம்!

இப்போதிருக்கும் முதியோர், கட்டாயம் படிக்கவேண்டும். தங்கள் குழந்தைகளுக்காகவேனும் ஒவ்வொருவரும் கல்வி யறிவு பெறுதல் வேண்டும்.

குழந்தைகளுக்கு 3 முதல் 5 வயது வரை கேள்விப் பருவம் (The age of question) என்று கூறலாம். சூரியன், நிலா, புகை வண்டி, உந்து வண்டி இவைகளைப் பற்றித் தம் பெற்றோரிடம் ஏதாவது கேள்வி கேட்பர். புகை வண்டி ஏன் தண்டவாளத்தில் ஓடுகிறது? கப்பல் எப்படி தண்ணீரில் மிதக்கிறது? வானத்தில் விண்மீன்கள் கண் சிமிட்டுவதேன்? இப்படியெல்லாம் கேட்டுத் தம் ஐயத்தைப் போக்கிக்கொள்ள ஆசைப்படுவர்.

6 முதல் 10 அல்லது 12 வயது வரை, கொள்ளும் பருவம் (The age of reception) என்று கூறுவர். இப் பருவத்தில் பெற்றோர் மிக விழிப்பாக இருத்தல் வேண்டும். குழந்தைகள் தம் சுற்றுச் சார்பில் தாம் காணுவது கேட்பது இவைகளை அப்படியே நிழற்படம் போலத் தம் உள்ளத்தில் கொள்ளுவர். அதேமாதிரி நடக்க முயலுவர். தீய பழக்கத்தால் குழந்தைகள் கெட்டுவிடுவது இந்தப் பருவமே. இப் பருவத்தில் உண்டாம் பழக்கம் அவர்கள் முதியவராந் துணையும் அவர்களை விட்டு நீங்காது. ஆகையால், பெற்றோர் இந்த வகையில் மிக்க அறிவுடைமையோடு தம் குழந்தைகளைக் கவனிக்க வேண்டியவராவர்.

என் மகன் நான்கு வயதுக் குழந்தையாயிருந்தபோது முதன் முதலில் நான்கு நாள் மிக்க மகிழ்ச்சியோடு பாடசாலைக்குச் சென்றான் ஐந்தாம் நாள் வீட்டிலிருந்தே படிக்கிறேன், பள்ளிக்குப் போக விருப்பவில்லை என்றான். எனக்கு ஆராய்ச்சி உண்டாகிவிட்டது. பள்ளியில் ஆசிரியர் யாரேனும் குழந்தையிடம் கடுமையாக நடந்து கொண்டார்களோ என்னவோ என்று நினைத்து நேரிற் சென்று ஆசிரியர்களைக் கேட்டேன். விவரம் கிடைத்தது.

குழந்தை ஆசிரியரிடம் ஏதோ கேள்வி கேட்டிருக்கிறான். அதற்குத் தக்க பதில் கூறிக் குழந்தைக்கு விருப்பத்தை நிறைவு செய்யாமல் வேறு ஏதோ சொல்லியிருக்கிறார்கள். அவனுக்கு அது பிடிக்கவில்லை. பள்ளிக்குப் போக விரும்பாததன் காரணம் அதுதான் என்று விளங்கி விட்டது.

பள்ளியில் குழந்தைகளின் உள்ளப் போக்கு அறிந்து கல்வி பயிற்ற வேண்டும். ஏதாவது கேள்வி கேட்டால் முதலில் அதற்கு விடை சொல்லிப் பிறகு வேறு செயலில் இறங்க வேண்டும். அஃதின்றி மருட்டுவது கண்டிப்பது சிறிதும் பொருத்தமில்லை.

5 ஆண்டுகள் வரையில் தாய் தந்தையரே குழந்தைக்கு உலகம் எல்லாம்; கேள்விகட்கு விடை சொல்ல வேண்டும். 'கடவுள் எப்படி யிருப்பார்' என்பது போன்ற கேள்விகட்கும் பெற்றோர் விடை சொல்லத் தம்மை ஆயத்தம் செய்துகொள்ள வேண்டும். ஆகவே தங்களுக்காகவும் தம் குழந்தைகளுக்காகவும் ஒவ்வொருவரும் கல்வி பயின்றாகவேண்டும். 50, 60 வயது ஆனவர்கள் கூடக் கல்வி பயிலலாம்.

முதியோர் கல்வித் திட்டத்தைப் பயன்படுத்திக்கொண்டு எல்லாரும் முதியோர் கல்வியைப் பரப்பலாம்.

முதியோர் கல்விக்குப் போதனா முறை பயிலாத ஆசிரியர்களை இந்தப் பள்ளியில் வேலைக்கு வைத்துக் கொள்வார்களா என்று ஒருவர் கேட்டார். தற்காலத்தில் பயிற்சி பெற்ற ஆசிரியர் வேண்டும் அளவுக்குக் கிடைப்பது இல்லை. பயிற்சி பெறாத ஆசிரியர்களில் ஒரு சிலர் பயிற்சி பெற்றவர்களைக் காட்டிலும் பணியாற்றக்கூடும் என்பது உண்மைதான். கிராமங்களில், மருத்துவக் கல்லூரியிற் பட்டம் பெறாத சாதாரண மருத்துவர்கள் செய்யும் மருத்துவத்தால் நோய்கள் வியக்கத்தக்க முறையில் குணமாகின்றன என்றாலும், M. B. B. S. போன்ற மருத்துவப் பட்டதாரிகள் நோயின் நிலைமை இன்னதென்று நன்கு நுனித்தறிந்து நோயைப் போக்கச் சிறந்த முறைகளைக் கையாளுதல் போல, அக் கிராம வைத்தியர்கள் செய்வதற்கு முடியாது. சில வகைகளில் நோய்க்கு மாறான மருந்துகள் கொடுக்கக்கூடிய நிலைமையில் வந்துவிடுகின்றனர். ஆகையால் பள்ளிகளிலும் போதனா முறை பயிற்சி பெற்ற ஆசிரியராக இருந்தால் குழந்தைகளின் உள்ளமறிந்து கல்வி பயிற்ற முடியும் என்று நினைக்கிறேன்.

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE MERCHANTS

AVANASHI ROAD,
COIMBATORE.

(6-ம் பக்கம் தொடர்ச்சி)

'எங்கே போகிறோம்?' என்றேன். 'இன்று ஆட்சி மன்றத்தில் முதலமைச்சர் நாட்டு நிலைமைபற்றிப் பேசுவார், போய்க் கேட்கலாம்' என்றாள்.

முதலமைச்சர் தமிழில் பேசிக் கொண்டிருந்தார். 'இவ் வாண்டில் நிதி நிலைமை திருப்தியா யிருக்கிறது. வரும் ஆண்டில் கொஞ்சம் மிச்சமும் எதிர்பார்க்கிறோம். நில வரியை ரூபாய்க்கு ஒரு அணா குறைப்பதென்று எண்ணி யிருக்கிறோம். அதற்கு மேல் குறைக்க நிதி நிலைமை இடந்தரவில்லை. என் என்றால் வைப்பு நிதியோடு ஐந்து நூறாயிரம் ரூபாய் சேர்க்க எண்ணி யிருக்கிறோம். மத்திய ஆட்சியினர் கொடுத்து வந்த உணவு மான்யத் தொகையை நம் நிதி நிலைமையில் திருப்தியைத் தெரிவித்து வேண்டாமென்று கூறி விட்டோம். அவர்கள் தங்கள் நன்றியைத் தெரிவித் திருக்கிறார்கள்.

இவ் வாண்டில் நல்ல மழையின் காரணமாகவும் நம் நீர்ப்பாசனத் திட்டங்களிற் சில முடிவடைந்து பயன்பட்டு வருவதாலும் நல்ல விளைவு கண்டிருக்கிறது. பங்கீட்டு முறையை எடுத்து விடலாமா என்று எண்ணினோம். ஆனால் சிறிதளவு உணவுப் பொருளைச் சேர்த்துவைக்க வேண்டுமென்று என் துணைவர்களில் பலர் கருதுகின்றனர். 2 நூறாயிரம் டன் உணவுப் பொருளைச் சேர்த்துவைத்து விட்டு எஞ்சியவற்றைப் பங்கீட்டு முறைப்படி மக்களுக்கு வழங்க எண்ணி யிருக்கிறோம். பங்கீட்டு அளவை வரும் ஆண்டில் 12 'அவுன்ஸி'லிருந்து 16 'அவுன்ஸ்' ஆக உயர்த்தத் திட்டமிட்டிருக்கிறோம். மத்திய ஆட்சியினிடம் எதுவும் வாங்கப்போவதில்லை.

ஆறு ஆண்டுகளுக்கு முன் கட்குடியைச் சட்டமியற்றி ஒழித்தோம். இப்போது மக்கள் தாங்களாகவே சாப்பி டீ இவைகளைக் குடிப்பதை ஒழித்து வருகின்றனர். இதற்குச் சட்டமே தேவையில்லாது போய்விட்டது. மிக மகிழ்ச்சி. (வரும்)

[முல்லைக்கொடியாள் வீட்டிற்கு மல்லிகை வருகிறாள்.]

மல்லிகை:—முல்லை! குளத்துக்கு நீராடப் போகிறேன். நீயும் வருகிறாயா?

முல்லைக்கொடி:—இதோ வந்து விட்டேன். [இருவரும் சாலையில் பேசிக்கொண்டே போகிறார்கள்.]

மல்—இன்று மாலை செந்தாமரை உன் வீட்டிற்கு வருவதாகச் சொன்னாள். நீ பாடுவதைக் கேட்க வேண்டுமாம்.

முல்—நீயும் வா, மல்லிகா;...

சற்று இந்தப் பாறையில் இருந்து போகலாம் வா. [இருவரும் போய் அமர்ந்து கொன்கிறார்கள்.]

மல்லிகா, நேற்றிரவு ஓர் இன்பமான கனவுகண்டேன். சொல்கிறேன் கேள் முதலில், ஒரு வட்டமான ஒளி தோன்றியது. அதன் நடுவே ஒரு பெண் நின்றுகொண்டிருந்தாள். அவள் மேனி ஒளிவிட்டு விளங்கிக் கொண்டிருந்தது. அவள் ஒரு தேவப் பெண்ணாய்த்தான் இருக்கவேண்டும். "நீங்கள் யார்?" என்று கேட்டேன். 'நான் யார் என்பதைப் பிறகு சொல்கிறேன். இன்று மாலையில் நீ சில நிலைமைகளை எண்ணி எண்ணி வாடி வருந்திக்கொண்டிருந்தாய்; இப்பொழுது உன்னைத் தேற்றும் பொருட்டே வந்தேன்' என்றாள்.

'நாடு செழித்து மக்கள் நலமடைந்தால் மட்டுந்தான் நான் தேறுதலடைவேன்' என்றேன்.

'என்னோடு வா' என்று அழைத்தாள்.

'எங்கே?' என்று கேட்டேன். 'பேசாமல் வா; பிறகு எல்லாம் தெரியும்' என்று கூறி அழைத்துப் போனாள்.

சிறிது தூரம் சென்றிருப்போம்; 'அதோபார்' என்று வானத்தைச் சுட்டிக் காட்டினாள். ஒரு தேர் இறங்கி வந்து எங்கள் அருகில் நின்றது.

சிந்தனைத் தேர்

(முத்துசாமி)

'இதுதான் சிந்தனைத் தேர்; இதில் ஏறிக்கொள். துன்முகி யாண்டுத் தமிழகத்துக்கும், பிறகு, பிலவ ஆண்டுத் தமிழகத்துக்கும் போய் வரலாம்' என்றாள்.

இருவரும் ஏறிக்கொண்டோம்; தேர் எழுந்து பறந்தது.

'துன்முகித் தமிழகம் எவ்வளவு தூரம்? என்று கேட்டேன். அப்பொழுது குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருந்தது. மனத்தின் விசையில் தேர் போய்க்கொண்டிருந்தது. 'ஐந்து காவதம்' (ஐந்து ஆண்டுகள்) என்றாள். 'பிலவத் தமிழகம் எவ்வளவு தூரம்?' என்று கேட்டேன். 'பின்னும் ஐந்து காவதம்' (ஐந்து ஆண்டுகள்) என்றாள்.

தேர் இறங்கி ஒரு பெரிய வெளியிடத்தில் நின்றது. 'இதுதான் துன்முகித் தமிழகம். வா, நகரத்தைச் சுற்றிப் பார்த்து வரலாம்' என்றாள்.

'எனக்கு நீர் வேட்கையாயிருக்கிறது, தண்ணீர் வேண்டும்' என்று கேட்டேன்.

ஓர் உணவு விடுதிக்கு அழைத்துச் சென்றாள். ஒரு சிறுவன் எங்கள் முன் வந்து என்ன வேண்டுமென்று கேட்டான். 'காப்பி கொண்டுவா' என்றேன். 'காப்பி இல்லை. இப்போது மிகுதியாக விலையாவதில்லை. அதனால் நிறுத்திவிட்டோம்' என்றான்: 'ஏதாவது கொண்டு வா' என்றேன். இருவருக்கும் 'ஹல்வா'வும் பசுவின் பாலும் கொண்டுவந்து வைத்தான். 'இதன் பெயர் என்ன என்று தெரியுமா?' என்று கேட்டாள். 'ஹல்வா' என்றேன். 'இல்லை, கோதுமை அமுது' என்றாள். தமிழ்ப் பெயராயிருப்பது கண்டு வியந்தேன்.
வெளியே வந்ததும் 'எவ்வளவு கொடுத்தீர்கள்? என்று கேட்டேன். 'இருவருக்கும் ஆறு அணா' என்றாள். அவ்வளவுதானா என்று வியப்படைந்தேன்.

'இத் தெருவின் பெயரென்ன?' என்று கேட்டேன். 'திருவள்ளுவர் கடைத் தெரு' என்றாள். 'தமிழ்ப் பெயர்தான். ஆனாலும் உயர்ந்த தமிழில்லை' என்றேன். 'இப்பொழுதுதான் தமிழ் மொழியை ஆட்சி மொழியாய்க் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்தி, ஆங்கிலம் இவ்விரண்டில் விருப்பமுள்ளதைக் கற்றுக் கொள்ளலாம் என்றும் தமிழ் மொழியை யாவரும் கட்டாயமாய்க் கற்கவேண்டும் என்றும் சட்டம் இயற்றியிருக்கின்றனர். வட நாட்டோடு தொடர்புகொள்ள இந்தி மொழியும் வெளி நாட்டோடு தொடர்புகொள்ள ஆங்கிலமும் வேண்டும் என்பது ஆட்சியினர் கருத்து. இப்பொழுதுதான் சட்டம் இயற்றியிருப்பதால் இன்னும் தமிழ் நன்றாய்ப் பரவவில்லை' என்றாள். தெருவின் இரு மருங்கிலும் உள்ள மேடைகளில் மக்கள் போய்க்கொண்டிருந்தனர். சிலர் புகை பிடித்துக்கொண்டு சென்றனர். ஆங்கிலமும் தமிழும் கலந்த ஒரு மொழி பேசிக்கொண்டு சென்றனர். ஊர்திகளில் இருக்கப் போதுமான இடமிருந்ததென்றாலும் நெருக்கியே மக்கள் அமர்ந்திருந்தனர்.

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

கைத்தறி ஆடைகள்

வணிகக் துறி!

—N. K. M.—

தங்க நாடா

(பதிவு)

எண் 20 முதல் 100 வரையில் வேட்டி, சேலை, துண்டு, போர்வை, மேலாடை முதலியவை பல வகைகளிற் கிடைக்கும்.

நூலாடைகட்கும்
பட்டாடைகட்கும்

நம்பிக்கையான இடம்:

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,

துணி வாணிபம்,

53, கிடங்குத் தெரு, சென்னை 1.

- பெற்றோர்மாட் டன்பு -

"தந்தை தாய்ப்பேண்"

"அன்னையும் பிதாவும்
முன்னறி தெய்வம்"

இது R. G. பிள்ளை B. A. அவர்களால் ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப் பெற்றது.

தம்மைப் பெற்றோர் மூப்பெய்தி உழைக்க வன்மையற்றவராகும் பொழுது, அவர் ஊனைப் பிறர் உண்பதற்கு அவர்களை விலைக்கு விற்கும் காட்டுமிராண்டிகள் இன்றுமுள்ளனர்.

நாகரிக வளர்ச்சியின் ஒரு கட்டத்தில், மிகப் பெரிய முன்னறிவுள்ள ஒருவன் தோன்றியிருப்பான். தான் மூப்பெய்துதம்பொழுது தன்னை உயிர் வாழ வைப்பதற்கேற்ற ஒரு …ன நிலையைத் தன் குழந்தைகள் இளைஞராயிருக்கையிலேயே அவரிடம் உண்டுபண்ணக்கூடுமென்பது அவன் உள்ளத்தில் தோன்றியிருக்கும்.

தன்னைப் பெற்றோரையும் அவன் ஏற்கனவே விலைக்கு விற்றவனாய் இருந்திருக்கக்கூடும். முழுதும் மாறான தன் கொள்கையை ஆதரிக்க … கட்சியை அவன் அமைத்துக் … உருப்பான். அக் கொடிய … அறிவிற்கு ஒவ்வாததென் …டுமா அவன் தன் கட்சிக்கு …யிருப்பான்? மக்கள்தம் …கள், காய்கனி கிழங்குகளையே …ண்மையான உணவாகக் கொள்வ…ால் ஏற்படும் ஆக்கங்கள், தம் குழந்தைகளுக்காக உழைத்து அலுத்துப்போன முதியோர்களின் ஒழுக்கப் பழியின்மை இவற்றை ஆதாரவாகக் காட்டியும் பேசியிருப்பான். உருக்குலைந்த தோற்றத்தை யுடையவனாயினும் சிறந்த அறிவையுடைய மூத்தோன் ஒருவனது ஊனைவிட அவன் அறிவுரையே சிறந்ததென அந்நேரம் பிறர் கருதியிருப்பார்கள். இஃதெப்படியாயினும், ஒருவன் தன் பெற்றோரைப் பிறர் உண்ண வழங்குதலினும் அவர்தமைப் போற்றுவதே முறையெனக் கருதப்பட்டது.

காலத்தால் முன்னிட்ட நாகரிகங்களில்தந்தையர்க்கேற்பட்டமரியாதை அளவிறந்ததாக நமக்குத் தோன்றுகிறது. அவர்களைப் பிறர் உண்ண வைத்து ஊதியம் பெறும் பழக்கத்தைக் கைவிட மிக வன்மை வாய்ந்ததொரு தடைமுறை வேண்டியிருந்ததென்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும்.

இக் காரணம் பற்றியே இயேசுவின் பத்துப் 'பிரமாணங்'களில் ஒன்று, 'உன் தாய் தந்தையரை நீ போற்றத் தவறினால் நீ இளமையில் இறப்பாய்' என்றெடுத்துக் காட்டுவதையும், ரோமர்கள், குற்றங்களில் பெற்றோர் கொலையை மிகக் கொடியதாகக் கொண்டார்களென்பதையும், கான்பியூஷியஸ் பெற்றோர் மாட்டன்பை ஒழுக்கத்திற்கு முதல் அடிப்படையாக்கினானென்பதையும் நாம் காண்கிறோம்.

குழந்தைகள் இளம் பருவத்தில் தம்மைத்தாமே காப்பாற்றிக்கொள்ளும் வன்மையற்றவர்களாயிருக்கிறார்கள். அவ்வமயம் பெற்றோர்களின் உதவியும் அதிகாரமும் குழந்தைகளுக்குக் கட்டாயமே. அவர் அப்பருவங் கடந்த நிலையிலும் பெற்றோர் அதிகாரம் நீடிக்கவேண்டித்தான், இவையெலாம் மனிதன் வகுத்துக்கொண்ட சூழ்ச்சிகளாயின. அவை இயற்கையாய், மனிதனது உள்ளுணர்விற்கு எட்டாது தோன்றியிருத்தலுங் கூடும். பெற்றோர் வசமுள்ள சொத்துக் காரணமாகவும் அவர் அதிகாரம் வலியுறுத்தப்பட்டது. பெற்றோர்மாட்டன்பில்லையாயின், வாலிபர்கள் தம் பெற்றோர் மூத்துத் தளர்ந்தபொழுது அவர்தம் ஆடுமாடுகளையும் பிற பொருள்களையும் அவர் ஆதிக்கத்தில் விட்டிருக்கமாட்டார்கள்.

—பெர்ட்ராண்ட் ரஸல்.

கந்தர் கழலெழுபது

[திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை M. A.]

33. வேதமுடி யகத்தோ வேடர் பொருப்பகத்தோ
தீதில் தணிகைச் சிலம்பகத்தோ — கீதத்து
மாண்பெறு வாய்மைத் திருப்புகழ்ப்பா வாழிடத்தோ
காண்பேம்நம் கந்தர் கழல்.

கழலின் அருமை

34. மாணிக்க மாகும் மரகதமாம் நன்முத்தாம்
ஆணிப்பொன் ஆகும் அருமருந்தாம் — சேணிற்
புலவர் தொழுபொருளாம் பொற்பார் சதங்கை
கலகலெனுங் கந்தர் கழல்.

35. எண்ணென்கோ எண்ணும் எழுத்தென்கோ எங்கெனது
கண்ணென்கோ என்றன் கருத்தென்கோ — உண்ணும்
உணவென்கோ என்றன் உயிரென்கோ தண்டை
கணகணெனுங் கந்தர் கழல்.

36. போதக் கழலென்கோ பொன்னங் கழலென்கோ
நாதக் கழலென்கோ நாலுமறை — வேதக்
கழலென்கோ சத்திக் கழலென்கோ முத்திக்
கழலென்கோ கந்தர் கழல்.

12 MAR 51

" முல்லைக் கொடி "

குருகுலத்தின் கிழமை இதழ்.

நல்ல தமிழில், புரியும் வகையில்,
உரிய விலையில்,
பலதுறைக் கருத்தில்,
சீர்திருத்த முறையில்,
சுவைப் பண்பில், பணி உருவில்
வெள்ளிக் கிழமைதோறும்
வெளிவரும்
ஒரு பெருந்தன்மையான
உணர்ச்சி வெளியீடு!

ஆண்டுக் கையொப்பம் ரூ. 4
வெளிநாட்டுக்கு ரூ. 5

குறிப்பு :—

குருகுலத்தார்க்குக் கட்டணம் இல்லை; தமிழாசிரியர்க்கும், திருவள்ளுவர் கழகங்களுக்கும் ஆண்டுக் கையொப்பம் ரூ 3 மட்டும்.

இதழ் விற்பனையாளர்

எல்லா ஊர்களிலும் தேவை;
ஆறில் ஒன்று கழிவு தரப்பெறும்.
இசைந்த முன்பணத்துடன்
தேவைக்கு எழுதுக!

விளம்பரத் திட்டம்

உள் பக்கம் :

ஒரு பத்தியில் ஓர் அங்குலம் ஒரு தடவைக்கு ரூ. $1\frac{1}{2}$. நீண்ட கால ஒப்பந்தங்களுக்கு ரூ. 1.

கு-பு.—நான்கு அங்குலத்துக்குக் குறையாத விளம்பரமும், ஓர் ஆண்டுக்குக் குறையாத ஒப்பந்தமும் முதன்மையாகக் கவனிக்கப்பெறும்.

மேல் பக்கம் :

முழுப் பக்கம்	ஒரு தடவைக்கு		ரூ. 30
அரைப் பக்கம்	,,	,,	ரூ. 16
ஒரு பத்தி	,,	,,	ரூ. 12

கு-பு.—தொடர்ந்த விளம்பரங்களுக்கு, கட்டண எளிமை கருதப்பெறும்.

குருகுலம், மாம்பாக்கம்;

(வடதிருச்சிற்றம்பலப் பெருவெளி)

மதுராந்தகம் (அஞ்.)

இது,
திருக்குறள் மறைக்குச்
செய்கை நிலையம்.

நாட்டு மக்கள், 'மொழி' 'கலை' 'தொழில்' 'அருள்' 'பணி' என்னும் ஐவகை வாழ்வியல் திறமைகளிற் சிறந்து திகழ்வதற்கு முயல்வது.

பள்ளி, கல்லூரி, கலையரங்கு, அச்சகம், நூற்பதிப்பு, இதழ்ப் பதிப்பு, படிப்பகம், தொழிலகம், அருள் நிலையம், உணவு விடுதி முதலிய பல்வகை உறுப்புகளுடன் பணி புரிவது.

வாழி, மன்பதை

குருகுலத்தில்

உணவு விடுதி

- பிள்ளைகள், பண்பிலும் திறமையிலும் இளம்பருவத்திலிருந்தே பழக்கம் பெற, குருகுல வாழ்க்கைதான் சிறந்தது!
- சுவைபொருந்திய நல்வாழ்க்கையைச் சிறு பருவத்திலேயே உருவாக்கிக்கொள்ள, எப்போதும் குருகுலச் சூழலே ஏற்றது.
- மதுராந்தகம் உயர்நிலைப்பள்ளி முதலிய அண்மையிடங்களிற் சென்று கல்வி பயில்வோர், குருகுல விடுதியில் இருக்க விரும்பினால், அவர்க்கும் இடம் அளிக்கப்பெறும்.
- உணவுத் தட்டும் விலையுயர்வும் உள்ள இக் காலத்தில் ஆண்டுக்கு ரூ. 200-க்கு மேற்படாத குறைந்த செலவிலும், விடுதியிற் கலந்து கொள்ள வாய்ப்புண்டு.
- தூய்மையிலும், பணியிலும், ஒருமையிலும் ஆர்வமுடையோர்க்குக் குருகுல இல்லத்தின் வாயில் என்றும் திறந்திருக்கின்றது!

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: இ. க. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம், மதுராந்தகம் (அஞ்.)